SRI LANKA

## இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# மட்டம III பரீட்சை – ஜனவரி 2021

# பரிந்துரைக்கப்பட்ட விடைகளும

# (304) கூட்டு நிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள ் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் III பரீட்சை – ஜனவரி 2021**

**(304) கூட்டு நிறுவன மற்றும் தனிநபர் வரியியல்**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

(மொத்தம் 20 புள்ளிகள்) **பகுதி - A**

## *வினா 1 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாம் 01 –இலங்கை வரியியலுக்கான அறிமுகம்***

ஜிகானின் இலங்கைக்கான வதிவிட அந்தஸ்து பின்வருமாறு

| **இலங்கையிலிருந்த காலம்** | **இலங்கையிலிருந்த நாட்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 01/04/2019 - 20/08/2019 | 142 நாட்கள் |
| 15/03/2019 - 31/03/2020 | 17 நாட்கள் |
| | **159 நாட்கள்** |

ஒரு தனிநபரின் பௌதீக ரீதியான இருப்பானது குறிப்பிட்ட ஆண்டிற்குள் தொடங்குகின்ற அல்லது முடிவடைகின்ற 12 மாத காலப்பகுதியில் 183 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாக இருப்பின் அவர் குறிப்பிட்ட வரி மதிப்பீட்டாண்டின் வரி நோக்கத்திற்காக வதிவுடையவராக கருதப்படுவார்.

மேற்குறித்த தகவல்களின் படிஇ 2019-2020 மதிப்பீட்டாண்டில் ஜிகானின் பௌதீக ரீதியான இருப்பானது 01 ஏப்ரல் 2019 தொடக்கம் 31 மார்ச் 2020 வரையான 12 மாத காலப்பகுதியில் 183 நாட்களுக்கு குறைவாக இருப்பதால் 2019-2020 மதிப்பீட்டாண்டில் ஜிகான் ஒரு வதிவற்ற தனிநபராக கருதப்படுவார்.

*(05 புள்ளிகள்)*

## *வினா 2 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 05 – கடப்பாடுகளும் நடவடிக்கைகளும்***

**(ய)**

| | | |
|---|---|---|
| 1வது காலாண்டு | - | 15 ஆவணி 2020 |
| 2வது காலாண்டு | - | 15 கார்த்திகை 2020 |
| 3வது காலாண்டு | - | 15 மாசி 2021 |
| 4லது காலாண்டு | - | 15 வைகாசி 2021 |

*(03 புள்ளிகள்)*

**(டி)** 2017 ஆம் ஆண்டு 24ஆம் இலக்க இறைவரிச்சட்டத்தின் 152 (1) ம் பிரிவின் படி ஒருவர் வரியினை இறுதித் திகதியில் அல்லது முன்னராக செலுத்தவில்லை எனில் அவை இறுதித் திகதியில் செலுத்த வேண்டிய கடப்பாடு இருக்கும் போது அவ்வரியானது செலுத்தத் தவறுகை வரியாக கருதப்படும்.

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

## *வினா 3 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| *அத்தியாயம் 07 – ஏனைய வணிக வரிகள்* |
|---|

**(a)** வருடாந்தம் ரூ. 300 மில்லியன்.

***(02 புள்ளிகள்)***

**(b)** 2002 ஆம் ஆண்டு 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 17 (1) மற்றும் திருத்தங்களின் படி, பெறுமதி சேர் வரி பதிவு இரத்து செய்தல் தொடர்பாக 'ம்ஸ் டிரேடிங் (தனி.) கம்பனியின் பொறுப்பக்கள் பின்வருமாறு:

1. பதிவுச் சான்றிதளை இறைவரித்திணைக்களத்தின் பொது ஆணையாளரிடம் (ஊபுஐசு) 14 நாட்களுக்குள் ஒப்படைத்தல்.
2. பதிவுச் சான்றிதளைக் காட்சிப்படுத்துவதை நிறுத்துதல்.
3. வரி விலைப்பட்டியல், வரி வரவு மற்றும் செலவுக் குறிப்புக்களை வழங்குவதை நிறுத்துதல்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 05 புள்ளிகள் )***

## *வினா 4 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| *அத்தியாயம் 07- வரி விதிப்படன் தொடர்புடைய தீர்ப்புவழிச் சட்டங்கள்* |
|---|

Hayley & Co Ltd. மற்றும் CIR வழக்கில், நுகர்வுப் பொருட்களை (விசேடமாக இறப்பர்) கொள்வனவு மற்றும் ஏற்றுமதி செய்யும் ஒரு நிறுவனம் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த பணத்தினை தொலைத்ததால் (களவு) பாதிக்கப்பட்டிருந்தது மேலும் காப்பீட்டு உரிமைகோரலுக்குப் பின்னர் தேறிய இழப்பை பெற்றுக் கொண்டது.

இவ்வழக்கின் தீர்ப்பின் படி பின்வரும் அடிப்படையில் இழப்பீட்டுக்கான காப்பீடு அனுமதிக்கப்பட்டது:

(1) செலவுகள் கொடுப்பனவுகளைப் போன்று கழிக்கக்கூடியவை. இவை விருப்புற்ற கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியது. இவ்வழக்கில், கொடுப்பனவுகள் வெள்ளம், நெருப்பு, மற்றும் களவு என்பவற்றால் இழக்கப்படும் பணம் மற்றம் பொருளை உள்ளடக்கியது.

(2) கொடுப்பனவுகள் வருமானத்தை தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். இவ்வழக்கில், கொடுப்பனவுகள் வியாபாரத்திற்கு தற்செயலான ஒன்றாக அனுமதிக்கப்படுகின்றது.

(3) இழப்பானது நிலையான மூலதனமல்லாது செயற்பாட்டு மூலதனத்தை பிரதிபலிப்பதால் மூலதனச் செலவாக கொள்ளப்பட மாட்டாது.

அதற்கமைய, களவு மூலமான தேறிய நட்டமாக ரூ. 300,00 காசை வரி நோக்கத்துக்கான அனுமதிக்கப்பட்ட செலவாக கொள்ளப்படும்.

***(05 புள்ளிகள்)***

| *பகுதி A முடிவு* |
|---|

(மொத்தம் 30 புள்ளிகள்) **பகுதி - B**

## *வினா 5 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

*அத்தியாயம் 04 – நானாவித முயற்சிகளின் வரியியல்*

**(a)**

**ஹப்பி டீல்ஸ்**
**2019/20 க்கான வரி மதிப்பீட்டாண்டுக்கான**
**வரி மதிப்பீடு**

| விபரம் | குறிப்பு | தொகை (ரூ) |
|---|---|---|
| வரிக்கு முன்னரான இலாபம் | | 1,850,000 |
| பங்காளர்கள் சம்பளம் | 1 | 2,160,000 |
| பெறுமானத் தேய்வு | | 420,000 |
| மூலதனக் கொடுப்பனவு | 2 | (600,000) |
| வாடகை | 3 | - |
| வாகன வாடகைக் கொடுப்பனவு | 4 | - |
| **பங்குடமை வியாபார வருமானம்** | | **3,830,000** |

**குறிப்பு 1 – பங்காளர்கள் சம்பளம்.**
பங்காளர் சம்பளக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட மாட்டாது.

| | | |
|---|---|---|
| ரவி | (ரூ. 80,000 x 12) | Rs. 960,000 |
| திலும் | (&. 100,000 x 12) | Rs. 1,200,00 |
| **மொத்தம்** | | **Rs. 2,160,000** |

**குறிப்பு 2 - மூலதனக் கொடுப்பனவுகள்.**
தரப்பட்ட தகவல்களின் படி, மசாலா பொருட்களை விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் வாகனம் மூலதனக் கொடுப்பனவுகளுக்கு தகுதியுடையவை.

மூலதனக் கொடுப்பனவுகள் = $\frac{\text{பெறுமானத்தேய்விடக்கூடிய சொத்தின் கிரயம்}}{\text{வருடங்களின் எண்ணிக்கை}}$ = $\frac{3,000,000}{5}$ = **Rs.600,000**

மேலதிக தகவல்களுக்காக:
வருமானத்தை ஈட்டுவதில் பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்விடக்கூடிய சொத்து ஒன்று, இறைவரிச்சட்டத்தின் 16வது பிரிவின் படி, வரிசெலுத்துபவர் மூலதனக் கொடுப்பனவுகளை பெறுவதற்கு தகுதியுடையதாகும். மேலும் கணக்கீட்டு பெறுமானத்தேய்வு நிராகரிக்கப்படும்.

**குறிப்பு 3 - வாடகை**
மேலதிக தகவல்களுக்காக:
84(1) (a) (i) வது பிரிவின் படி, பங்குடமையினால் வாடகை செலுத்தப்படும் பொழுது 10% நிறுத்திவைத்தல் வரி கழிப்பனவுக்கு உட்பட்டது. வாடகைக் கொடுப்பனவுக்கான நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படாதவிடத்து, 10(2) வது பிரிவின் படி, வரிமதிப்பிடக்கூடிய வருமானத்திலிருந்து செலவுகளை கழிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.
நிறுத்திவைத்தல் வரி தொடர்பாக வினாவில் குறிப்பிடப்படாதவிடத்து, பங்குடமையானது வாடகைக்கான நிறுத்திவைத்தல் வரியினை கழித்து CGIR க்கு செலுத்தியுள்ளதாக கருதப்படும்.

**குறிப்பு 4 – வாகன வாடகைச் செலவு**

<u>மேலதிக தகவல்களுக்காக:</u>

84(1) (a) (i) வது பிரிவின் படி, பங்குடமையினால் வாகன வாடகை செலுத்தப்படும் பொழுது 10% நிறுத்திவைத்தல் வரி கழிப்பனவுக்கு உட்பட்டது. வாகனத்திற்கான வாடகைக் கொடுப்பனவுக்கான நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படாதவிடத்து, 10(2) வது பிரிவின் படி, வரிமதிப்பிடக்கூடிய வருமானத்திலிருந்து வாடகை செலவுகளை கழிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

பங்குடமையானது வாகன வாடகைக்கான நிறுத்திவைத்தல் வரியினை கழித்து இறைவரி ஆணையாளருக்கு (CGIR) செலுத்தியுள்ளதாக கருதப்படும்.

***(03 புள்ளிகள்)***

**(b)** பங்குடமையால் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் வரி

| | |
|---|---|
| வரி நோக்கத்துக்கான பங்குடமை வருமானம் | Rs. 3,830,000 |
| நிறுத்திவைத்தல் வரி வீதம் | 8% |
| நிறுத்திவைத்தல் வரி (3,830,000x8%) | Rs. 306,400/- |

***(02 புள்ளிகள்)***

**(c)** ஒவ்வொரு பங்காளருக்குமான பங்குடமை வருமான பங்கு

| **விபரம்** | **ரவி** | **திலும்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| பங்காளர் சம்பளம் | 960,000 | 1,200,000 | 2,160,000 |
| இலாபப் பங்கு | 835,000 | 835,000 | 1,670,000 |
| | **1,795,000** | **2,035,000** | **3,830,000** |

***(03 புள்ளிகள்)***

**(d)** ஒவ்வொரு பங்காளருக்குமான நிறுத்திவைத்தல் வரி வரவுகள்.

| **விபரம்** | **ரவி** | **திலும்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 8% நிறுத்திவைத்தல் வரி | 143,600 | 162,800 | 306,400 |

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 6 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

*அத்தியாயம் 05 – கடப்பாடுகளும் நடவடிக்கைகளும்*

**(A) (a)** 2019 கார்த்திகை 30ஆம் திகதி.

*(02 புள்ளிகள்)*

**(b)** மதிப்பீட்டு அறிக்கையில் பினவரும் விடயங்களை உள்ளடக்க வேண்டும்.

(1) வரி மதிப்பிடப்பட்ட தொகை
(2) அபராதம் மதிப்பிடப்பட்டது
(3) தாமதமாக செலுத்தப்படும் வட்டி மதிப்பிடப்பட்டது
(4) வரிக்காலம்
(5) கொடுப்பனவுக்கான இறுதித் திகதி
(6) மதிப்பீட்டை எதிர்ப்பதற்கான நடைமுறை
(7) வரி செலுத்துபவரின் பெயர்
(8) வரி செலுத்துபவரின் அடையாள இலக்கம்
(9) அறிக்கை வழங்கிய வரித்திகதி.

*(04 புள்ளிகள்)*

**(B)**

**2019 ஆனி மாதத்திற்கான**
**செலுத்தவேண்டிய மூலதன ஆதாய வரி கணிப்பீடு**

| | | |
|---|---|---|
| | | **Rs.'000** |
| **விற்பனைப் பெறுவனவு** | | |
| **கழி:** | | **48,000** |
| 30/09/2017 இல் சந்தைப் பெறுமதி | 40,000 | |
| தரகுக் கூரி | 130 | 40,130 |
| **மூலதன ஆதாயம்** | | **7,870** |

மேற்குறித்த நடவடிக்கைக்கான செலுத்தவேண்டிய மூலதன ஆதாய வரி
(ரூ. 7,870 × 10%) = **&. 787,000**

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 7 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

| *அத்தியாயம் 07 – ஏனைய வணிக வரிகள்* |
|---|

**கு்பு மலர்கள் நிறுவனம்**
**31 மார்ச் 2020 இல் முடிவடைந்த காலாண்டுக்கான**
**செலுத்தவேண்டிய பெறுமதிசேர் வரி மதிப்பீடு**

| | | | (ரு'000) |
|---|---|---|---|
| **வெளியீட்டு வரி** | **வழங்கல் பெறுமதி** | **வரி வீதம்** | |
| **வரி** | | | |
| வரிவிதிப்பு வழங்கல் | 85,750 | 8% | 6,860 |
| விலக்களிக்கப்பட்ட வழங்கல் | 12,250 | - | - |
| **மொத்த வெளியீட்டு வரி** | **98,000** | | **6,860** |

**உள்ளீட்டு வரி**

மலர்ப்பண்ணை தொடர்பான செலவினங்கள் மீதானது – அனுமதிக்கப்படவில்லை.

விலக்களிக்கப்பட்ட வழங்கலுடன் தொடர்புடையது.

| | | | |
|---|---|---|---|
| அலங்கரிப்பு பொருள் கொள்வனவு மீது | | 3,435 | |
| பொதுச் செலவுகள் மீது | 448 | | |
| கழி: விலக்களிக்கப்பட்ட வழங்கலுக்கான உள்ளீட்டு வரி | | | |
| $\frac{12,250 \times 448}{98,000}$ | (56) | 392 | |
| கீழ்கொண்டுவரப்பட்ட உள்ளீட்டு வரி | | 160 | |
| | | 3,987 | |
| பூஜ்ஜிய வீத வழங்கலுக்கான உள்ளீட்டு வரி | | - | |
| 100% வெளியீட்டு வரிக்க மட்டுப்படுத்தப்பட்டது | 6,860 | 3,987 | (3,987) |
| **செலுத்த வேண்டிய VAT** | | | **2,873** |
| கழி: தவணைக்கட்டணம் செலுத்தியது | | | (2,000) |
| **செலுத்த வேண்டிய மீதி VAT** | | | **873** |

aat SRI LANKA

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

| *பகுதி **B** முடிவு* |
|---|

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 8 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

*அத்தியாயம் 03 – கம்பனி வரியியல்*

**SRI புரொடக்ஸ் (தனி) கம்பனி**
**2019.⁚.20 மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி மதிப்பீடு**

| | குறிப்பு | | ரூ. |
|---|---|---|---|
| வணிகத்திலிருந்து வருமானம் | 1 | | 40,073,600 |
| முதலீட்டு வருமானம் | 2 | | - |
| **வரி மதிப்பிடக்கூடிய வருமானம்** | | | **40,073,600** |
| குறை: தகைமைக் கொடுப்பனவுகளும் நிவாரணங்களும் | 3 | | (1,500,000) |
| **வரி விதிக்கக்கூடிய வருமானம்** | | | **38,573,600** |
| வருமான வரி | | | - |
| **14% வரி** | 4 | | **5,400,304** |
| குறை: வரி வரவுகள் | | | |
| பொருளாதார சேவைக்கட்டணம் | | 1,180,000 | |
| காலாண்டுக் கொடுப்பனவுகள் | | 5,000,000 | 6,180,000 |
| **செலுத்தவேண்டிய மீதி வரி** | | | **(779,696)** |

குறிப்பு 1:

SRI LANKA

**SRI புரொடக்ஸ் (தனி) கம்பனி**
**2019-20 மதிப்பீட்டாண்டிற்கான**
**வணிகத்திலிருந்தான மதிப்பிடக்கூடிய வருமானக் கணிப்பீடு**

**(Rs.'000)**

| விபரம் | செய்முறை | ூ | - |
|---|---|---|---|
| தேறிய இலாபம் | | 33,650 | |
| பங்குலாபம் - முதலீட்டு வருமானம் | | - | 301 |
| இயந்திரம் அகற்றுதல் இலாபம் | 1 | - | 168 |
| மதிப்பீட்டு செலவு (சமநிலைக் கொடுப்பனவு) | 1 | - | 70 |
| பெறுமானத் தேய்வு – அனுமதிக்கப்படாதது | | 6,242 | - |
| மூலதனக் கொடுப்பனவு | 2 | - | 3,076.4 |
| அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடைகள் | 3 | 1,000 | - |
| அரச நன்கொடைகள் | 3 | 1,000 | - |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 4 | 1,563 | - |
| பொழுதுபோக்கு | 5 | 234 | - |
| விளம்பரம் | 6 | - | - |
| இயக்குனர் போக்குவரத்து செலவு | 7 | - | - |
| குத்தகை வட்டி | 8 | - | - |
| **மொத்தம்** | | **43,689** | **3,615.4** |
| **மதிப்பிடக்கூடிய வருமானம்** | | **40,073.6** | |

**செய்முறை 1 – இயந்திர அகற்றல் மீதான இலாபம்**

இயந்திர அகற்றல் மீதான கணக்கீட்டு இலாபம் வரி விதிக்கக்கூடிய இலாபமாக கொள்ளப்படுவதில்லை. உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய, வணிகத்தில் பயன்படுத்தப்படும் பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்துக்களின் அகற்றல் மீதான மதிப்பிடக்கூடிய செலவு அல்லது சமநிலைக் கொடுப்பனவை கணிப்பீடு செய்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **விற்பனைப் பெறுவனவு** | | | **750,000** |
| **குறை: வரி குறைத்தெழுதப்பட்ட பெறுமதி** | | | |
| இயந்திரக்கிரயம் | | 2,460,000 | |
| *(-) கோரப்பட்ட மூலதனக் கொடுப்பனவு* | | | |
| Y/A 2017/18 - 2,460,000X33 1/3* | 820,000 | | |
| Y/A 2018/19 - 2,460,000X33 1/3 | 820,000 | (1,640,000) | 820,000 |
| **சமநிலைக் கொடுப்பனவு** | | | **70,000** |

* இயந்திர அகற்றலுக்கான மூலதனக் கொடுப்பனவு கணிப்பீட்டில், 01.04.2018 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு 2006 ம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைவான மூலதனக் கொடுப்பனவு வீதங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**செய்முறை 2 – மூலதனக் கொடுப்பனவுகள்**

கணக்கீட்டு பெறுமானத்தேய்வு அனுமதிக்கப்படாததுடன் இவ்வருட வருமானத்தை ஈட்டுவதில் பயன்படுத்திய சொத்துக்கள் மூலதனக் கொடுப்பனவுகளுக்கு தகுதியுடையவையாகும்.

**(ரூ.'000)**

| **விபரம்** | **கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு** | **கிரயம்** | **மூலதனக் கொடுப்பனவு வீதம்** | மூலதனக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| காணி | 2018/19 | 8000 | - | - |
| கட்டடம் | 2018/19 | 10,000 | 20 வருடங்கள் | 500 |
| இயந்திரம் | 2018/19 | 5,750 (8,210-2,465) | 5 வருடங்கள் | 1,150 |
| மோட்டார் வாகனம் | 2018/19 | 2,465 | 5 வருடங்கள் | 493 |
| மோட்டார் வாகனம் | 2019/20 | 1,350 | 5 வருடங்கள் | 270 |
| அலுவலக உபகரணம் | 2018/19 | 867 | 5 வருடங்கள் | 173.4 |
| கணிணி | 2018/19 | 1,850 | 5 வருடங்கள் | 370 |
| கணிணி மென்பொருள் | 2019/20 | 1,200 | 10 வருடங்கள் | 120 |
| **மொத்தம்** | | | | **3,076.4** |

**செய்முறை 3 – நன்கொடை**

அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடைகள், அரச நன்கொடைகள் வருமானமீட்டலுடன் தொடர்பற்றதால் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் தகைமைக் கொடுப்பனவாக வரிவிதிக்கத்தக்க வருமானத்திலிருந்து கழிக்க தகுதியுடையவை.

**செய்முறை 4 – பணிக்கொடை**

பிரிவு 10 (1) (b viii) இன் கீழ் பணிக்கொடை ஏற்பாடு அனுமதிக்கப்பட மாட்டாது.

**செய்முறை 5 – பொழுதுபோக்கு**

பிரிவு 10 (1) (b) (vii) இன் கீழ் பொழுதுபோக்கு செலவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது

aat SRI LANKA

**செய்முறை 6 – விளம்பரம்**

விளையாட்டு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பட்ட வருமானத்தை ஈட்டும் செலவாக இருப்பதனால் அனுமதிக்கப்பட்ட செலவாகும்.

**செய்முறை 7 – பணிப்பாளர்களின் வெளிநாட்டு பிரயாணச் செலவு**

வருமானத்தை ஈட்டும் செலவாக இருப்பதனால் அனுமதிக்கப்பட்ட செலவாகும்.

**செய்முறை 8 – குத்தகை வட்டி**

2017 ஆம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 18 வது பிரிவின்படி வாகனம் மீதான நிதிக் குத்தகை வட்டி கழிக்க முடியும். விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகையால் நிதி உபகரணங்களுக்காக கழிக்கப்படும் நிதிக் குத்தகை வட்டியானது, கூறப்பட்ட மூலதன ஒதுக்கங்களின் 3 மடங்கால் மட்டுப்படுத்தப்படும்.

| | | | |
|---|---|---|---|
| மொத்த குத்தகை பெறுமதி | (34,000x12x4) | = | 1,632,000 |
| குறை: செலுத்திய தவணைக் கட்டணம் | (34,000x11) | = | (374,000) |
| நிதிக்குத்தகைக்கான மீதி நிலுவை | | = | 1,258,000 |

நிதிச் செலவு 196,000

கூறப்பட்ட மூலதன ஒதுக்கங்கள் வினாவில் தரப்படாததால், மொத்த நிதிச் செலவும் வியாபார இலாப கணிப்பீட்டில் கழிக்க முடியுமென கொள்க.

**குறிப்பு 2: முதலீட்டு வருமானம்**

| | |
|---|---|
| பங்குலாபம் (301,000/86x100) | 350,000 |
| **குறை: விலக்களிப்பு வருமானம் /இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பவு** | |
| பங்குலாபம் | 350,000 |
| வணிகத்தின் மதிப்பிடக்கூடிய வருமானம் | - |

**குறிப்பு 3: தகைமைக் கொடுப்பனவுகள்**

நிறுவனமானது ரூ.1,000,000 காசினை இடம்பெயர்ந்த முதியோர்களுக்கான விடுதி ஒன்றிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது எனக்கொள்க. எனவே கழிப்பனவானது வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் 1/5 பகுதி அல்லது ரூ.500,000 அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடையாக வழங்க முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடை

(வரிவிதிக்கத்தக்க் வருமானத்தின் 1/5 பகுதி அல்லது ரூ.500,000)

500,000

| | |
|---|---|
| அரச நன்கொடை | 1,000,000 |
| | 1,500,000 |

**குறிப்பு 4: வரி வீதம்**

2017 ஆம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 01வது அட்டவணையின் 4(2) (a) பந்தியில் குறிப்பிட்ட படி, நிறுவனமானது முதன்மையானதாக ஏற்றுமதி செயற்பாட்டில் ஈடுபடுவதால், 14% வரி வீதத்தை பிரயோகிக்க முடியும்.

***(25 புள்ளிகள்)***



aat SRI LANKA

## *வினா 9 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

*அத்தியாயம் 03 – தனிநபர் வரியியல்*

**காமினி**
**2019-20 மதிப்பீட்டாண்டிற்கான**
**செலுத்தவேண்டிய வருமான வரிக்கணிப்பீடு**

| | | | | |
|---|---|---|---|---|
| | | **குறிப்பு** | **ரூ.** | |
| **ரூ.** | | | | |
| தொழில் மூலமான மதிப்பிடத்தக்க வருமானம் | | 1 | | 5,220,000 |
| வணிகம் மூலமான மதிப்பிடத்தக்க வருமானம் | | 2 | | 2,369,000 |
| முதலீட்டிலிருந்தான மதிப்பிடத்தக்க வருமானம் | | 3 | | 300,000 |
| **மொத்த மதிப்பிடத்தக்க வருமானம்** | | | | **7,889,000** |
| **குறை: நிவாரணங்கள் மற்றும் தகைமைக் கொடுப்பனவுகள்** | | | | |
| வேலை நிவாரணம் | | | 500,000 | |
| தனிநபர் நிவாரணம் | | | 700,000 | |
| வாடகை நிவாரணம் (300,000x25%) | | | 75,000 | |
| **மொத்த நிவாரணம்** | | | **1,275,000** | |
| நன்கொடை (100% அனுமதிக்கப்பட்டது) | | | 500,000 | |
| **மொத்த நிவாரணங்கள் மற்றும் தகைமைக் கொடுப்பனவுகள்** | | | | **(1,775,000)** |
| **வரிவிதிக்கத்தக்க வருமானம்** | | | | **6,114,000** |
| **செலுத்தவேண்டிய வரி** | | | | |
| முதல் | 600,000 | x 4% | 24,000 | |
| இரண்டாம் | 600,000 | x 8% | 48,000 | |
| மூன்றாம் | 600,000 | x 12% | 72,000 | |
| அடுத்த | 600,000 | x 16% | 96,000 | |
| அடுத்த | 600,000 | x 20% | 120,000 | |
| மீதி | 3,114,000 | x 24% | 747,360 | |
| **மொத்த செலுத்தவேண்டிய வரி** | | | | **1,107,360** |
| **குறை : வரி வரவுகள்** | | | | |
| PAYE | | | 604,800 | |
| தவணைக்கட்டணம் | | | 100,000 | |
| | | | | (704,800) |
| **மீதி செலுத்தவேண்டிய வரி (மேலதிக கொடுப்பனவு)** | | | | **402,560** |

SRI LANKA

## குறிப்பு 1 – வேலைவாய்ப்பு வருமானம்

**அடிப்படை தொழில்:**

| | |
|---|---|
| அடிப்படை சம்பளம் (325,000 x 12) | 3,900,000 |
| பயணப்படி (50,000 x 12) | 600,000 |
| உபகாரத்தொகை | 300,000 |
| செயலமர்வு செலவு – வேலைவாய்ப்பு வருமானம் அல்ல | - |
| வீட்டு நன்மை (35,000x12) | 420,000 |
| **வேலைவாய்ப்பு மூலமான மதிப்பித்தக்க வருமானம்** | **5,220,000** |

## குறிப்பு 2 – வணிகத்திலிருந்தான வருமானம்

| | செயல்முறை | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | 2,844,000 |
| **குறை : செலவுகள்** | | | |
| ஊழியர் சம்பளம் | | 225,000 | |
| மின்சாரம் மற்றும் நீர் | | 27,000 | |
| பெறுமானத்தேய்வு | 1 | - | - |
| ஏனைய செலவுகள் (அனுமதிக்கப்பட்டது) | | 143,000 | |
| மூலதனக் கொடுப்பனவுகள் | 1 | 80,000 | (475,000) |
| **வணிகத்திலிருந்தான மதிப்பிடத்தக்க வருமானம்** | | | **2,369,000** |

**செய்முறை 1: மூலதனக் கொடுப்பனவுகள்**

கணக்கீட்டு பெறுமானத்தேய்வு அனுமதிக்கப்படாததுடன் இவ்வருட வருமானத்தை ஈட்டுவதில் பயன்படுத்திய சொத்துக்கள் மூலதனக் கொடுப்பனவுகளுக்கு தகுதியுடையவையாகும். அதற்கமைய, அலுவலக உபகரணங்களுக்கான மூலதனக் கொடுப்பனவு

$$\text{மூலதனக் கொடுப்பனவு} = \frac{\text{பெறுமானத்தேய்விடக்கூடிய சொத்துகள்}}{\text{வருடங்களின் எண்ணிக்கை}} = \frac{400,000}{5}$$

**= ஆண்டுக்கு ரூ. 80,000**

**குறிப்பு 3 – முதலீட்டு வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| வாடகை வருமானம் (25,000 x 12) | | 300,000 | |
| வட்டி வருமானம் | | 132,000 | |
| QPC பங்கு விற்பனையின் மூலதன ஆதாயம் | | | |
| விற்பனை வருமானம் | 6,000,000 | | |
| பங்குகளின் கொள்வனவுச் செலவு | (5,000,000) | 1,000,000 | |
| பங்குலாபம் | $\frac{243,000}{86} \times 100$ | 282,558 | 1,714,558 |

**குறை: விலக்களிப்பு வருமானம் மற்றும் இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு**

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம் (இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு | 132,000 | |
| QPC பங்கு விற்பனையின் மூலதன ஆதாயம் (விலக்களிப்பு வருமானம்) | 1,000,000 | |
| பங்குலாபம் (இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு) | 282,558 | (1,414,558) |
| **முதலீட்டின் மூலமான மதிப்பிடத்தக்க வருமானம்** | | **300,000** |

*(25 புள்ளிகள்)*

*பகுதி **C** முடிவு*

aat SRI LANKA

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*